ஓலை 132| ஓசை 255| ஜூலை 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## ஆறுமுக நாவலர்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

அகர முதல இலக்கியப் பேரவை

# திருக்குறள்

## குறள்

அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு

## பொருள்

குடும்பம், உறவு என்பாரிடத்துக் கொள்ளும் அன்பு, உலகத்தவரிடம் எல்லாம் உறவு கொள்ளும் விருப்பை உண்டாக்கும். அதுவே அனைவரையும் நட்பாக்கும் சிறப்பையும் உண்டாக்கும்

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa  www.aagaramuthala.com  aagaramuthala@gmail.com

நூன்முறை தெளிந்து சீலத் தொழுகு!

## பாவகை : வழிநடைச் சிந்து




தேவநேயர் நூலகம் பாரடி - அதில்
 தேர்ந்தறிவு நூல்படிடி
 திசைதோறும் நீஓங்கடி;
ஆவதெல்லாம் அறிஞர் அண்ணா - நூலகம்
 அங்கேதான் நீபாரடி
 அறிவேற நூல்படிடி!

**இலக்கணக் குறிப்பு:**
வழிப் பயணம் போகும்போது ஒருவன் ஒருத்திக்குக் காணும் காட்சிகளைப் பாடலாகப் பாடி உணர்த்தி நடப்பதுவே வழிநடைச் சிந்தாகும். மேலே உள்ள பாடல், முதலடி மூன்று சீர்கள் வந்து, தனிச்சொல் வந்து இரண்டாமடி நான்கு சீர்கள் மடக்கி வரும் முந்நாற் சீரிரட்டை ஆகும்.

## பாவகை : வழிநடைச் சிந்து




வீடுகள் தெருக்கள் நாட்டில் பெரும்
 வியன்மிகு நூல்கள் வேண்டும் ஏட்டில்;
காடுகள் தம்மிலும் நாட்டில் - போல்
 கனிந்தே நூலகம் பரப்பிடு ஏட்டில்!

**இலக்கணக் குறிப்பு:**
இது முதலடி மூன்று சீர், தனிச்சீர் வந்து, பின்னடி நான்கு சீர்கள் இரண்டு முறை வருதலால், முந்நாற் சீரிரட்டை ஆகும். ஒவ்வோரடியின் இறுதிச்சீர் சந்த ஓசையாக வரும்.

## பாவகை : பாவகை : பஃறொடை வெண்பா



கள்ளமிலாப் புன்னகையால்
கன்னம் சிவக்கும்.
உள்ளத்தில் பொங்கும்
உணர்வால் சிறக்கும்.

அன்பாகத் தொட்டே
அணைக்கச் சிலிர்க்குமே
கன்னலாய்ப் பேசும்
கவலையை நீக்குமே.

கற்பனையாய் நாளும்
கதைகளும் சொல்லுமே
சற்றே கவனித்தே
சாதனை செய்யுமே.

காந்தமாய் ஈர்த்திடும்
கண்ணின் அசைவுமே
பாந்தமாய் முத்தமும்
பற்றியே தந்திடும்.

மென்மை தடவலில்
மேவிடும் இன்பமே
தென்றலாய்த் தீண்டவே
தேகமும் சில்லிடும்.

நெஞ்சில் நினைத்ததை
நேர்படச் சொல்லிடும்
வெஞ்சம் நினையாத
வெட்பு.

கவிஞர் செ. கலைவாணி

# வெல்வாய் பெண்ணே!



இடியென இடர்களும் இடைவெளி இன்றியே
இன்னலைக் குவிப்பினும் இடிந்திடா எழுந்திடு
கடினமே பாதையாய் கண்மணி ஆகலாம்
கண்களில் நீர்த்துளி கசிந்திடா கடந்திடு
மகுடமாய் முட்களை மானிடர் சூட்டலாம்
மறதியை அழைத்துநீ மாண்பினைக் காட்டிடு
நிகரிலா அணங்கவள் நிகழ்த்துவாள் சாதனை
நிலையிலா உலகினில் நின்புகழ் செதுக்கிடு

பாரதி கனவுகள் பாரினில் பலித்திட
பாவையும் விண்வெளி பதித்தனள் கால்தடம்
சாரதி ஆகுமே சத்திய துணிவுமே
சளைத்திடாப் பற்றிடு சரித்திரம் படைக்கவே
பேரிகை யாவையும் பெருமைகள் முழங்கிட
பெண்ணவள் திறனுமே பேரொலி எழுப்புமே
காரிகை நீயுமே கவினுற எழுதிடு
கடவுளின் படைப்பிலே கலைநயம் நீயென

இழப்புகள் நேரலாம் எழுந்துவா உறுதியாய்
இன்னமும் வாழ்வினில் இன்பமும் இருக்குதே
அழைப்புகள் இன்றியே அடிக்கடி துன்பமும்
அகத்தினை வாட்டுதோ அறுத்தெறி எதிர்மறை
உழைப்பெனும் விதைகளே உயர்த்திடும் உலகிலே
உனக்கென தனியிடம் ஒட்பமாய் வடித்திடு
விழுதுகள் விட்டிடும் விருட்சமே தாரகை
வென்றிடு வென்றிடு விருப்பமாய் எதையுமே

கவிஞர் பூர்ணிமா சங்கர்

# வலி







உடுத்தியிருந்த
அழுக்குச் சட்டையை அவன்
கிழிக்கத் தொடங்கினான்.
ஒவ்வொரு கூச்சலுக்கும்
கதறலுக்குப் பிறகும்
இன்னுமின்னும்
சட்டையை அவன்
கிழித்துக் கொள்கிறான்.
அவன் பக்கத்தில் ஒருவரையும்
நெருங்க விடாமல் கூச்சல்
பெருங்கூச்சலாய் மாறுகிறது.
அவன் அழுக்குத் தலையை
பத்துவிரல்களால்
கீறிக் கொள்கிறான்.
உடம்பெங்கிலும் குருதி வழியும்
ரணங்கள்.
காவிநிறம் படிந்த
பற்கள் தெரிய அழுதும் சிரித்தும்
அச்சுறுத்துகிறான்.
அவனை வேடிக்கை
பார்க்கிறோமே தவிர
ஒருவரும் அவன் பக்கத்தில்
நெருங்கவில்லை.
பத்து வயது மதிக்கத் தக்க
சிறுவனொருவன் அச்சமேதுமின்றி
அவன் பக்கத்தில் ஓடோடிச் சென்று
ஞெகிழி கோப்பை நிறைய தேநீரும்
ரொட்டித் துண்டையும்
பரிவோடு தருகிறான்.
அகோரப் பசியில் சுவையறியாமல்
வேகமாய்த் தின்று முடித்தவன்
தொண்டைக்குழி விக்க
மயங்கிய நிலையில் சரிகிறான்.
அப்பா...அப்பா...வென
கதறுகிறான் அச்சிறுவன்.
நான் உள்பட வேடிக்கைப் பார்த்துக்
கொண்டிருந்த
எங்கள் எல்லோருடைய
சட்டையும் அழுக்கான நிலையில்
படுகேவலமாய்க் கிழிந்திருக்க
அழுதும் சிரித்தும் கொண்டிருக்கிறோம்.
சரிந்த அழுக்குச் சட்டைக்காரனின்
ரணங்களில் வழியும் குருதி
மெல்ல மெல்ல உறையத் தொடங்கியது.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# நான் வாழும் வாழ்க்கை என்னவனுக்காக

முகம் பார்க்காமல்
முகவரி அறியாமலே
உன் மீது
தீராத காதல் கொண்டேனே!
இதயத்தால் ஈர்த்து
அன்பினால் கட்டி போட்டு
ஆட்சி செய்யும் என்னவனே!
என்னை நாடி வரும்
அந்த நொடிக்காக
எதிர்பார்த்து நிற்கிறேன்
வழி மேல் விழி வைத்து காத்திருக்கிறேன்!
நீயின்றி நானில்லை
நான் இல்லாத உலகில் நீ மட்டும் எப்படி?
எந்நேரமும் உன்னையே நினைக்கும்
உன்னவள் நானே!



கவிஞர் மோனிஷா

## அதிகாரம் : 115



தலைவிபால் கொள்காதலை
பிறர் பழித்திடினும்.
காதலனுயிர் நிலைத்திருப்பதை
பழிப்போர் அறியாராமே.

காதலியின் பேரன்பை
அறிந்திடா இவ்வூரார்.
இருவரையும் இணைத்து
தூற்றிப் பழிக்கின்றனரே.

ஊரார் தூற்றியதால்
காதலியின் கூட்டுறவை.
சேர்ந்ததுபோல் இன்பம்
காதலன் அடைந்தானே.

ஊராரின் தூற்றுதலால்
பெருங்காதலாய் மாறிற்றாமே.
இல்லையாகில் காதலது
சுருங்கி போயிருக்குமாமே.

உண்டிடவே மயக்கும்
கள்போல காதலும்.
ஊரார் அலர்த்திடவே
அதியின்பம் மிகதருமாமே.

ஒருநாள் காதலனை
கண்டதற்கே அச்செய்தி.
கருநாகம்விழுங்கிய திங்கள்போல்
தூற்றலாய் எங்கும்பரவியதாமே.

காதலியின் காதல்நோய்க்கு
ஊராரின் தூற்றல்எருவாம்.
தாயின் கடுஞ்சொல்லே
குளிர்விக்கும் நீராகுமே.

ஊராரின் தூற்றலால்
காதலை யடக்குதலென்பது.
நெருப்பை நெய்விட்டே
அணைப்போமென்பது போன்றதே.

பிரிந்திடேன் அஞ்சிடாதே
என்றகாதலன் பிரிந்தநாழி.
எறியப்பட்ட தூற்றலுக்கு
காதலி அஞ்சுவதில்லையாமே.

காதலனை ஊரார்தூற்றிட
வருந்திய அவனே.
காதலியை அழைத்துச்செல்ல
உடனே இணங்குவனே.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# முதிர் கன்னி

கானகம் பேசும் காதல் மொழிக்கு
கானக இளவரசியாகிய குயிலோ
மழலை மொழியில் பதில் சொல்ல

காரிகையவளின் கனவிற்கு
பதில் சொல்ல எவருமில்லை என்பது
என்ன விந்தையோ!?

தோரணம் கட்டி பந்தல் இட்டு
மணமேடை அமைத்து
மன்னவன் கையினால் மாங்கல்ய,
மெட்டி பெற்று இவன் என்னவன் என
கூறி வலம் வர ஆசைதான் இப்பேதைக்கு

ஆனால் என்ன செய்வது?
காலம் வகுத்துள்ள சீதனம் என்ற ஒன்று
இந்த ஏழ்மை குடியில் பிறந்த
மங்கையவளின் மண வாழ்கைக்கு
தடை போடுகிறதே

இத்தடைகளை தகர்த்து கொண்டு
தன் கை பிடிப்பான் தன்னவன் என்று
மலராமல் கருக காத்திருக்கும்
மொட்டிவளின் ஊமை குரலை
யார் தான் அறிவாரோ?



கவிஞர் என். ரிஷானா, கிழக்கிலங்கை, ஓட்டமாவடி.

# பருவமெனும் வில்லுடைத்து

பருவமெனும் வில்லுடைத்துப்
போகாதே பொன்மயிலே
செவ்விதழ் புன்னகையில்
தேனூறும் இதழ்களே

செப்பிடும் வார்த்தைகளில்
செவ்வானமும் நாணிடுமோ
செந்நிற மேனிதனில்
மையல் கொண்டேன்

செழிப்பான அங்கங்களில்
செழுமையும் மிளிர்கிறதே
செக்கச் சிவந்தவளே
ஈர்த்திட்டாய் என்னையே

செந்தாமரை மலராய்
பூத்திட்டாய் இதயத்திலே
செம்பொன் ஆடையணிந்து
சொலித்திடும் பாவையே

செய்யாள் வடிவமே
மயங்கினேன் உன்னிடமே
செம்பு கலந்திடாத
சொக்கத் தங்கமே

ஆரணங்கே அழகான
அற்புத மானே
திகட்டாத தேனே
நளினமான நங்கையே



பருவமெனும் வில்லுடைத்துப்
போகாதே பொன்மயிலே
பட்டாடை உடுத்தியே
பளபளக்கும் பாவையே

காவியத்தின் நாயகியே
கார்குழல் காரிகையே
தளிருடல் மேனியாளே
சிற்றிடைக் கொடியாளே

வாழ்வில் வரமானவளே
வசந்தமாய் வந்திடுவாயே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# இன்று

இன்று என்பது இலையுதிர்
காலங்களின் நிரந்தர
நிகழ்வுகளாய்

வசந்தங்கள் தொலைத்த
வாழ்க்கை பாதைகள்
எல்லைகள் தேடும் ஏக்கங்களாய்

மனிதரில் பலரும் கூட்டமாய்
வாழும் உடல் திண்ணும்
உயிரினங்களாய்

பழைய நாட்களின் முகவரிகள்
தொலைக்கப்பட்ட நினைவுகளாய்
இன்று தேடப்படும் தேடல்களாய்

மனிதாபிமானம் இன்று
தெருவோரங்களில் குவிக்கப்பட்ட
மலக்கழிவுகளாய்

நேற்றையின் அடையாளங்கள்
இன்றைய தினங்களின்
கண்ணீர் போர்வைகளாய்

மனிதன் என்னும் மாமிசம்
நடமாடும் நாகரீகத்தின்
அறிவியல் அசிங்கங்களாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# நட்பின் ஓர் விழுதுகள்!



ஒரு மனம் தனித்திருக்க
ஒரு மனம் நினைவுகளோடிருக்க
காற்றில்லா புல்லாங்குழலாய்
இரு மனமும் மவுனித்திருக்க!

உயிரூட்ட உள்ளத்தினுள் ஓர் தேடல்
இரு மனமும் புரிதலினால் ஒன்றியிருக்க
கண் காணுமுன்னே ஓர் தேடல்!

உள்ளத்தின் வலிகளை காணலியே
வீண் சிந்தை உருவாகலியே
மனம் எங்கும் அலைபாயலியே
நாட்களும் நேரமும் போதலியே
கதைத்து கதைத்து ஓய்வடையலியே!

இது என்ன அருமருந்து
இது என்ன பாதை
புரியலியே!

மன மகிழ தனிமையின் தேடலா
அது அல்லவே
எதிர் பார்ப்பில்லா நட்பின் உறவா
ஆம் தானே!
வழியில்லா உள்ளத்தின் ஓர் பகிர்வா
அது அல்லவே
ஒருமித்த புரிதலின் தன்னிகரற்ற சிந்தையாலா
ஆம் தானே!

உறவுகள் தரும் வலிகள்
உற்றார் உருவாக்கும் வேதனைகள்
உரியவர்களும் தரும் துயரங்கள்
ஓயாத ஒழியாத உவலைகள்
இவையனைத்தும் இல்லா தனிப்பயணம்
இனியது தானே எப்பொழுதும்
இது நிரந்தரமா இவ்வுலகில்!
இறைவன் ஒருவரே!!அறிவாரே!

கவிஞர் செல்வகுமரன் சுரேஷ்குமார், சீனா




தவத்தில் தனித்திருக்கும் குளக்கரையில்
தாவிக் குதித்த தவளைகள்
தண்ணீரை திடுக்கிடச் செய்தன.
ஆழ் கனவில் பூத்திட்ட
அற்புதத்தை உதறி
அலையாய் விரிகின்றன ஆசைகள்.
உண்ணத் தெரியாத
பிஞ்சின் கைகளில் ஒளிந்து கொண்ட இனிப்பாய்
தண்ணீரோடு விளையாடுகின்றன தாவரங்கள்.
மண்ணைக் குலைத்து  வேரை நீட்டித்து
கரை உயர்த்தும் தண்ணீரின் தேடல்.
பெருகும் அலையைப் பருகியபடி
பெரிதாகிறது உயிரின் வாழ்வு.
மரங்களின் பிள்ளைகள்
குதித்துக் குதித்து
குளத்தை நிறச்சேர்க்கை செய்கின்றன.
விழி மூடி வேடிக்கை துறந்து கரையில்
சும்மா இருக்கிறார் கடவுள்.
வரம் வாங்க வந்தவன்
வைத்த காலடியில்
வெடித்துச் சிதறி வறண்டு போனது குளம்
வஞ்சகனின் வாழ்வை போல.

கவிஞர் இளையவன் சிவா

# வஞ்சை உறவு

மண் தின்னப் போகும் உடலுக்கேன்
இத்தனை வன்மம்.
மறைத்தொன்று மறைக்காமலொன்று என்று
அத்தனை பொறாமைச் சுவாலைகள்
தனல் பறக்குமளவு
வஞ்சனைச் சிரிப்பும்;
நஞ்சினியமிர்த வார்த்தையும்;
பாசங்குப் பழக்கமும்
பட்டாம்பூச்சி போல்
கண்டவுடன் கைகளைத் தடவி
உறவு கொள்கின்றனவே.




கவிஞர் அதீனா அபூ உபைதா, ஓட்டமாவடி (கிழக்கிலங்கை)

பாவை என்பவள்
பூவாய் மலர்ந்தாளோ
கூடி பேசுகையிலே
ஆனந்தம் காண்பாளோ
இன்முகம் மலர்ந்து
அழகு கண்டாளோ
மனதின் பாரங்கள் குறைந்து
அழகியானளோ
முற்றத்து முல்லையிலும்
கதைகள் தருவாளோ
ஓய்வில்லா உழைப்பாளியாய்
நடந்து கொண்டாலும்
அவளில்லா உலகம்
ஆடவருக்கு ஏது
அவளில்லா இல்லம்
அழகில்லா ஓவியமே!



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம்

# மெய்ப்பொருள் காண்ப தறிவு

மின்மினிப் பூச்சியின்
ஒளி வெள்ள அணிவகுப்பில்
ஆங்காங்கே
ஆலமரக் கிளைபோல்
பரவிக் கிடந்தன
மலிவு விலைச் சந்தைக் கடைகள்!

பூக்களை மொய்க்கும் வண்டுகளாய்
பரப்பி வைத்திருந்த
மினுமினுக்கும் மின்னணு
மலிவு விலைப் பொருட்களை
காந்தமாய்க் கையில் பற்றி
வியாபாரியிடம் அடித்துப் பேசி
மஞ்சப் பையில் வாரிக் கொண்டோர்
முகத்தில் வெற்றிப் பெருமிதம்
முகவரி எழுதிக் கொண்டது!

அப்பொழுது

வெடித்துச் சிதறும் எரிமலையாய்
ஆவேச நெருப்பைக் கையில் கொண்டு
சந்தையில் நுழைந்த சில நபர்களால்
சென்ற வாரம் வாங்கிய
பொருளின் நம்பகத்தன்மை
வியாபாரி முகத்தில் எழுதப்பட்டது!

எடுத்த பொருளை
எறிந்து விட்டு
மெய்ப்பொருள் கண்ட
மிதப்பில் நடந்தனர்
சோதனைச் சாலையில்
வேடிக்கை பார்த்த
விந்தை மனிதர்கள்!



கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# குழந்தையும் தெய்வமும்

கண்களின் மொழியால்
கொள்ளை கொள்கிறாய்!
கைகளின் செயல்களால்
வியப்பில் ஆழ்த்துகிறாய்!
குறுநகையால் மனம்
குதூகலிக்கச் செய்கிறாய்!
கொஞ்சும் மழையால்
உலகம் மறக்க வைக்கிறாய்!
சிறுசிறு குறும்பால்
நினைவு துறக்கிறது!
உன்னைக் கவனிப்பதால்
உணர்ச்சிகள் பொங்குது!



கவிஞர் ரா. ஜோதிமணி, தாராபுரம்

# சிரிக்கும் படுக்கை விரிப்பு



நாளைக்காவாது படுக்கை விரிப்பை
மாற்றி விட வேண்டும்!
ஏன் நாளைக்கு; இன்றைக்கு ஏன் கூடாது?
தர்க்கத்தில் கழிகிறது பொழுது!

தர்க்கம் தான் வேலையை தடுக்கிறது
கட்டுப்படு!அடங்கு! அத்து மீறாதே!
நாளை என்பது பெருங்கனவு தானே?
கனவை துரத்து! தாமதிக்காதே!

படிக்கிற காலத்திலும் அப்படிதான்!
நாளை நாளை என்று ஒத்திப் போட்டது எத்தனை?
ஒத்திப் போனது எத்தனை?
யாருக்கோ அடிபட்டதற்கு நான் ஏன் போனேன்?

திருவிழா என்ன அவ்வளவு முக்கியமா?
தேர் வீதியுலா நான் இல்லாமல் நடக்காதா?
இரவெல்லாம் சங்கீத கச்சேரி!
பகலெல்லாம் தூக்கம்!

கல்லூரி பக்கம் போய் நாளாச்சு!
நான் படிப்பதென்ன கெமிஸ்ட்ரியா?
அப்புறம் ஏன் பிஸிக்ஸ் பக்கமே போவதில்லை?
பிடிக்கவில்லை போகவில்லை!

அப்புறம் ராணுவத்தில் ஆறு மாதத்தில் ஓடி வந்தது!
ஏதோவொரு அரசாங்க வேலை!
ஏதோவொரு திருமணம்! மனைவி மக்கள்!

ஆமாம் புத்தகங்கள் ஏன் இறைந்து கிடக்கிறது?
அடுக்கி வைக்க வேண்டும்!
வாகனத்தை சரி செய்ய வேண்டும்!
வேண்டாம் படுக்கை விரிப்பை மாற்றுவோம்!

காலிங் பெல் அடிக்கிறதே?
மாமா உங்களைத் தேடி ஒருவர் வந்திருந்தார்!
கல்யாண பத்திரிக்கை தந்தார்!
கட்டாயம் வரச் சொன்னார்!

யார் இவர்? தெரிந்த நபர் போல இல்லையே?
குழப்பத்தில் உறங்கிப் போனேன்!
காலையில் படுக்கை விரிப்பு
என்னை பார்த்து சிரித்தது இன்றும்!

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# என்ன செய்வேன்!

சிலந்தி வளைபோல் வாழ்வை அமைத்ததில்
சிக்கிட வைத்தான் ஆறறிவு மனிதனை;
சிந்திக்கும் திறனைத் தந்தவன் சந்தி
சிரிக்கும்படி செயல்செய்ய வைத்து மதிமயக்கினான்;
சிறப்பாய்வாழ நினைத்தோரைப் பிறர்பார்த்து சிரிக்கவைத்தான்;
வெறுப்புடன் வாழ்ந்தோரை பிறர்விரும்பிடச் செய்தான்!
வாழ்வு போதுமென நினைத்தோரை வாழ்ந்திடச் செய்து
வாழ்வு வேண்டுமென நினைத்தோர் கதையினை முடித்தான்!
வாழ்த்தவும் முடியவில்லை; வையவும் முடியவில்லை
வையகம் படைத்து காத்து அழிக்குமந்த
வைத்தீஸ்வரனாம் அருண சிவாவை அடியேனால்!



கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# பெறுவதும்–அடைவதும்

உயர் பெற்றோர் வாய்க்க;
நற் கல்வியொடு
நற் புகழ் பெற்றேன்.

நல் இணையுடன்
இன்பமும், துன்பமும்;
சீர் செல்வமும்'
வறுமையும்; பெற்றேன்.

பெற்ற மக்கள்
பெரும் வாழ்வு,
கண்டதையும் பெற்றேன்.

முதிர் அகவை எழுபத்தாறில், என்
உடல் நலம்
சற்றே ஊசலாடியும்.
அடுப்படி வேலையை,
அலுக்காமல் செய்கிறேன்.

இன்னும் பெற எனக்கு இனிதென்று
ஏதேனும் ஒன்றும் உண்டா; என்ன?

அடைவதற்கே உள்ளது:
கடந்து நிற்பவன் அருளால்,

நல் வினையால்
முன்வினை முற்றும் அறுத்து;

நல் கருணை
நல் ஞானம்,
நல் துறவு
நற்பேறும் சித்திக்கட்டும்!

அடைவதற்கும் வேறெதுவும் இனி இல்லை.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# மனித சாதி

காக்கை குருவி
எங்கள் சாதி

மனித சாதிக்குள்ளிருக்கும்
எந்த சாதி?

ஓர் புன்னகை!

உதயத்தில்
எதிர்ப்பட்ட அன்பரின்
புன்னகைப்பூ என்
கரங்களில் (அதரங்களில்)
பூங்கொத்தாக தொற்றிக் கொள்ள

எதிரில் வந்த
ஒவ்வொரு மனிதருக்கும்
ஒவ்வொரு மலராக
கொடுத்துச் செல்கிறேன்.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# இதசு (முநிகவி)



தேடிப் பிடித்து வெட்டிச் செதுக்கித்
துளையிட்டு வாசித்துக்
காதுகளையும் மனதையும்
இதமாக்கிவிட்டு

தன்னிலை மாறாமல்
இசையைத் தந்துவிட்டு

வழிப்போக்கர்களைக் குரலோசையில்
இழுத்துப் பிடித்துவிட்டு

திடீரென ஓட்டைகளை அடைத்து உடைத்துக்
கழுத்தில் குத்திக் கிழித்து அறுத்துவிட்டு

இசையை அழித்துத் துரத்திவிட்டுப்
பேரானந்தம் கண்டாய்

மீண்டும் வேறுயாரையும்
இழுத்துக் குத்திவிடாதே

நீ உடைத்த
கடைசி
புல்லாங்குழலும் மூங்கிலும்!

கவிஞர் ஆ. அருண் குமார், திருவண்ணாமலை

# நம்பிக்கை

கடலலைகளை
விளையாட்டுப் பொருளாக
பார்த்து
புன்னகைக்கிறது
குழந்தை
பெற்றோரின் கைகளில்
இருக்கும் போது

பிரச்சனைகளும்
அப்படித்தான்
நாம்
கடவுளின் கைகளில்
இருக்கும் போது



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு



எழுத்தால் நனைப்பது
விரல்களின் இயல்பென்று தெரிந்தும்
உன் நிழலில் காத்திருப்பதும்
பொய்தான்

மங்கி மறையும்
வானத்து விண்மீன்கள்
சிமிட்டிச் சிரிக்க
பார்வைகளைத்தான் திருடுகிறது

இது இதயம் தழுவிய
காதல் அல்ல
இருண்ட தேசத்தின்
சில குமுறல்கள்

சுருங்கி விரியும்
சுவாசத்தின் நிறைவை
கனப் பொழுதேனும்
கலைத்துவிட விருப்பமில்லை

பொய்யான கனவுகளை நெய்தே
மெய்யான உணர்வை
உசுப்பியவன்
கல்லான இவள் மனதில்
கரைந்து காவியம்
தேடுகிறாயோ

மௌனம் கொட்டும்
இரவின் மடியில்
இரந்து கொள்கிறேன்
இதயத்தை மட்டும்

கரைந்து விடும்
வாழ்க்கைப் பக்கங்கள்
வர்ணங்கள் சுமக்கும்
வடுக்களைத் தொலைத்து

தக்க சமயம் பார்த்து
சமரசத் தேன் பருகிடுவாய்
நொடி போதுமென நினைக்கும்
உன் தொலைவின் நீளங்கள்

மொழியில் மலர்
வயதில் சமர்
கலையில் கலைஞன்
கருவில் கண்ணன்

கவிஞர் சேஹூ மொஹம்மது பெனீஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

# சாரல் மழை

கருமேகம் திரண்டு ஊர்வலம் வர
வானம் பேசும் மௌன மொழியில்
தென்றல் காற்று சற்றே மோதி
சாந்தமாய் கன்னி முத்தமிட!
சாரல் மழை துளித்துளியாக
மேனி சிலிர்க்க குளிரும் சேர
மெல்லிசையாய் எனைத் தாலாட்ட
மெழுகாய் உருகும் என் உள்ளம்!
மௌனம் பேசும் கண்வழியே
காதலின் வாசல் திறக்கும்
சாரல் நனைத்த இரவினில்
மழை மெல்லிய உணர்வாய் மாறும்!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

1330 குறளும் 133 அதிகாரமும் கொண்ட  தங்கசுரங்கமே!
முத்து ஆழ்கடலில் தேடினால்தான் கிடைக்கும்.
நம் திருக்குறளோ உலகில் எல்லா இடங்களிலும் கிடைக்குமே!
நம் தமிழ் கடவுள் தந்த சொத்து திருவள்ளுவமே!
என்னதான்  இல்லை திருக்குறளிலே!
கடவுள் வாழ்த்தில் கடவுளையும் குறிப்பிடவில்லையே!
உலகப் பொதுமறைக்கு சான்றிதுவே .

இறைவன் திருவடி பற்றி நிற்பவர் பிறவி என்னும்
பெருங்கடலை கடந்து விடுவார்கள் என்கிறார்.
இந்த தமிழ் புதையல் உலகப் பொதுமறை,
நம் தமிழ் மண்ணுக்கும் நமக்குமே சொந்தமானதே!
மதுரை தமிழ் சங்கத்தில் சிறப்புற பங்கு பெற்று
பலரின் பாராட்டை பெற்றவர் ஆவாரே!

திருவள்ளுவர் பெருமான் கடவுள் நம்பிக்கையும்,
ஊழ்வினையில் நம்பிக்கையும் கொண்டவர்.
ஏழை, எளிய மக்கள் மீது
அளவு கடந்த இரக்கம் கொண்டவர்.

அரசியல், பொருளியல், சமூகவியல்,
உளவியல் உண்மைகளைக் கொண்டு
விளங்குகின்றதே, திருக்குறள்.
காமத்துப்பாலில் காதலர் உள்ளம்
அன்பினால் இணைந்து மக்கள் முழுமை
அடைவதை காட்டுகிறதே!
திருக்குறளுக்கு நிகர் திருக்குறளே!




கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# அவன்



அவன் அவனாய் வாழ்ந்த
நாட்கள் அவனுக்கு
நினைத்து பார்க்க கூட
நேரமில்லையே
வேலைக்கு சென்ற பின்
குடும்ப பாரம் சுமக்கும்
சுமை தாங்கியானான்
எல்லோருக்கும் எல்லாமுமாய்
இருக்கும் அவன்
தனக்காக வாழ மறக்கிறான்.
மற்றவர் பார்வைக்கு
அன்பை வெளிப்படுத்த தெரியாதவனாய்.
முரடனாய் சிரிக்க தெரியாதவனாய்.
அவனே!
இல்லத்து அரசன்
அவன் இல்லையேல்
அணுவும் அசையாது!

கவிஞர் உஷா தங்கவேல்

# சாதனை படைத்திடுவோம்

ஆண்டவனாய் நம்மை படைத்து
பூமியிலே வளர்த்து விட்ட
அதிசயமே நம் பெற்றோர்கள்.

கல்வி என்னும் அறிவு படைத்து
சமூகத்தில் நம்மை சான்றோராய்
உயர்த்திட்ட ஆசிரியர்கள்.

அல்லவை நீக்கி
நல்லவை அத்தனையும்
நயமாய் பெற்றிட
நாளும் உழைத்த சான்றோர்கள்.

உழைப்புக்கு வழிகாட்டி
உயர்வுக்கு தோள் கொடுத்த
உயிருக்கு நிகரான நட்புகள்.

வறண்ட வாழ்வில் வளம் சேர்க்க வந்து
வாழ்வையே சோலையாக்கிய
வசந்தத்தின் வரவாய் மனைவி.

மகத்தான செயல்களால்
மனிதரில் புனிதராய்
மாற்றிவிடும் குருமார்கள்.

வாழ்க்கை என்னும் கடலில்
வளமாய் நாம் பயணிக்க
வழிகாட்டும் பெரியோர்களை
தெய்வமாய் போற்றியே
சாதனைகளை படைத்திடுவோம்.



கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# வரதட்சணை

தேவதையாக வரும் பெண்ணவளை
கொண்டாடி தீர்க்காமல்
வரதட்சணை அரக்கன் பிடியில்
திண்டாடவிட்டு உயிரையே
காவு வாங்கும் சமூகத்தின்
போக்கை மாற்ற
சட்டங்களை கடுமையாக்கினால் மட்டுமே
இதற்கு நிரந்தர தீர்வு காண முடியும்!

பணம் படைத்தவன்
ஆசைக்கு அளவில்லாமல்
பெண்வீட்டில் விலைபோகும் நிலை
மாறுவது எப்போது?

அரசியல் பின்புலம் உள்ளவன்
அந்நியாயமாய் போடும் குரூர ஆட்டங்கள்
அப்பாவி பெண்களை
தற்கொலைக்கு தூண்டுகிறது
இதுவும் கொலையில் சேரும் தானே?

கொலைகாரர்கள் இன்னமும்
வெளியேதானே உலவுகிறார்கள்
தவறிழைத்தவன் தண்டனை
பெறாத வரை எதுவும் இங்கே ஓய்வதில்லை!



கவிஞர் ஞா. கோமதி தேவா, பண்ருட்டி

# வரி

வாடிக்கையான வரிவசூல்
ரோந்துப்பணியில்
காவல்துறை வாகனம்
வரியாக வந்தது
செய்தித்தாள் அதிகாலையில்
நான்குமுனை சந்திப்பில்




கவிஞர் முனைவர். அக. வீரவன் சாரா, சிதம்பரம்

# நாமும் மா(ற்)றுவோம்

நாளை மாறனும்
மாற்றம் என்றுமே தொடரனும்
நெகிழிதனை விடுத்து
நீர்நிலைகளையும் நிலங்களையும் காத்திட
நாளை மாறும் வசந்தமாய்

மண்ணை மலடாக்கும்
செயற்கை உரங்களை விடுத்து
இயற்கை உரங்களை உபயோகிக்க
ஆரோக்கியமான வாழ்வாய் நாளை மாறும்!
வாகனப்புகைகளை குறைத்து
வளிதனை தூய்மைப் படுத்திட
நாம் முனைந்தால் தூய்மை வளி கிடைத்தே
நாளை மாறும் நன்விடியலாய்



அயல் நாட்டு மோகமதை ஒழித்து
தன் நாடே பெரிதென வாழ்ந்திட
அந்நியர் ஆதிக்கமின்றி நாளை மாறும்
கையூட்டும் களவும் அறவே துறந்து
அகிம்சைதனை ஊட்டிட
நாளை மாறும் நம் தேசமும் நல் தேசமாய்
இருப்போன் இல்லாதோர் மேலோர் கீழோர்

உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்று
பாகுபாடில்லா வாழ்வினால்
அனைவரும் சமமென்ற நிலை நாளை மாறும்!
பிறர் படும் துயரைக் காணச் சகியாது
ஓடிச் சென்று உதவும் நிலை வந்திட
அகிலமும் சுவர்க்கமாய் நாளை மாறும்

ஆடம்பரமதை துறந்து
சேமிப்பும் சிக்கனமும் கொண்டு வாழ்ந்திட
நாளை மாறும் இனிமையாய்
எதிர்காலமதைக் கருத்தில் கொண்டு
நிகழ்காலமதில் செய்திடும்
நற் செயல்களால் நாளை மாறும்
புவியும் ஆனந்தமாய்
வன்முறைதனை விடுத்து அன்பு வழி நடந்திட
அமைதியான விடியலாய் நாளை மாறும்

நாளை மாறனும் மாற்றம் என்றுமே தொடரனும்
அம்மாற்றமும் நம்மிடமிருந்தே தொடங்கனும்

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# நடுகல் வழிபாடு



நீங்கள்
புதைக்கப்படவில்லை
விதைக்கப்பட்டிருக்கிறீர்கள்
விசித்திரமான
விளை நிலங்களில்!
***

உங்களின்
எலும்பும் சதையும்
ஊனமும் மானமும்
மண்ணுக்கு உரம்!
விண்ணுக்கோ வரம்!
***

விதைக்கப்பட்ட இடங்களிலெல்லாம் நாங்கள்
விழுந்து வணங்குகிறோம்
"வாழும் உங்களுக்கு"
வரலாறு காணாத
பொங்கல் செய்து படைக்கிறோம்!
***

உலகமே - இவர்கள்
எங்களின் காவல் தெய்வங்கள்!
சங்கத் தமிழன் வரலாற்றில் வந்த
சரித்திர நாயகர்கள்!
***

அவர்களுக்கான இந்த வழிபாடு
இன்று நேற்றைய வழிபாடல்லவே...
தொல்காப்பியத்துக்கும் முன்பே
தொடங்கப்பட்ட வழிபாடு!
ஒல்காப்புகழ் தொல்காப்பியம்
உணர்வுபூர்வமாய்க் கூறும் ஓர் உன்னதமான வழிபாடு!
***

நடப்பட்டவர்களை
வணங்குகிறோம்
அவர்களுக்கான நடுகற்களை வணங்குகிறோம்
அந்த நடுகற்களைப் படைத்த
அருந்தவச் சிற்பிகளை வணங்குகிறோம்!
***

ஆழப்புதைந்து
அடிவரைக்கும் வேரோடி
நீர் தேடி நிழல் தந்து நிற்கும்
பூலோக கற்பக தருக்கள் நீங்கள்!
***

நீங்கள் தோற்கவில்லை!
நடுகல் வழிபாடோ
தோற்பதில்லை!
இது இன்று நேற்றைய
வழிபாடல்லவே!!

கவிஞர் மதிநுதி — சரஸ்வதி புத்திரன், கிழக்குப் பெருநிலப்பரப்பு, ஈழ (மீ) வளநாடு

# காத்திருத்தல்



இலைகள்
உதிர்கிறதேயென
எந்த மரமும்
வருந்துவதேயில்லை
காத்திருந்து
பூத்துக் குலுங்குகின்றன

சிறுகூட்டுக்குள்
பிறந்ததுக்காக
எந்த புழுவும்
புலம்புவதேயில்லை
காத்திருந்து
பட்டாம்பூச்சியாகி விடுகின்றன

நீரோடையில்
சிறிய மீன்களைக் கண்டு
எந்த கொக்கும்
எரிச்சலடைவதேயில்லை
காத்திருந்து
பெரிய மீனை பிடித்து விடுகிறது

பூமிக்குள்
புதைந்து விட்டதற்காக
எந்த விதையும்
கவலை கொள்வதேயில்லை
காத்திருந்து
விருட்சமாகிவிடுகிறது

முட்டையிட்டதும்
எந்த குருவியும்
சலித்துக் கொள்வதேயில்லை
காத்திருந்து
அழகாய் அடைகாத்து
குஞ்சுகளோடு பறந்துவிடுகிறது

காத்திருத்தல்
அலாதியானது -அது
அற்புதமானது!

கவிஞர் இளங்கோவன் மணியன்

# முரசு

மன்னர்கள் ஆட்சியில் இசைக்கருவி முரசாகும்!
முரசென்பதும் மன்னர்களின் அடையாளங்களில் ஒன்றாகும்!
ஒன்று வீரமுரசு! தியாகமுரசு, நியாயமுரசென
முரசுகளில் மூவகைகள்! போர்க்காலங்களில் வீரமுரசு!
வீரமுரசு வெற்றி ,தோல்விகளை தெரிவிக்கும் முரசு!
முரசொலி வீரர்களின் உணர்வுகளைத் தூண்டிடுமே!
தூண்டிய உணர்வால் வீரம் வெளிப்படுமே!
வெளியில் தனிமேடை உயரமான இடத்தினிலே!
இடமதற்கு முரசுக் கட்டிலெனும் பெயருண்டு!
பெயருக்கேற்ப நியாயம் கேட்க நியாயமுரசு!
நியாயம் கேட்க விழைவோரை அழைத்திடுமே!
அழைத்தவர் நீதிகேட்க ஆங்கே விசாரணை!
விசாரணை அரசன் முன்னிலையில் நிகழ்ந்திடுமே!
நிகழ்வுகளில் ஆன்றோர் சான்றோரும் இடம்பிடிப்பர்!
இடம்பிடித்த நியாயமுரசு இந்நாளில் தமுக்காய்!
தமுக்கின் துணையால் கிராமங்களில் அறிவிப்பு!
அறிவிப்பை வறியவர்க்கு அளித்திடும் தியாகமுரசு!
தியாகமும் வீரமும் தமிழர்களின் தனிப்பண்பு!
தனிப்பண்பாய் கொடையினில் வெளிப்படுத்தும் மரியாதை!
மரியாதையும் கருணையும் இணைந்ததே கொடையாகும்!
கொடையளிக்கும் நேரத்தில் ஒலித்திடும் தியாகமுரசு!
முரசுகளின் மூவகையை தெரிவிக்கும் இக்கவிதை!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# அக்கப்போர்

அக இருளகற்றும் ஆசிரியர்
அல்லற்பட்டு தெருவில் இறங்க
அறப்போர் அடக்க அரம்பர் படை
அவிழ்த்து தீராப் பழி ஏற்கும் ஆயம்.
ஆக்கமில்லா அரசு ஆன்றோர்
அறமொழி கேட்க மனமில்லாமல்
அக்கப்போர் செய்கிறது.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு



அடுக்கி கொண்டே போகிறான்
கல்லையும் செலவையும்
கொத்தனார்
***

விருந்தாளிக்கு டீ அல்லாமல்
ஆப்பிள் ஜூஸ் குடுத்தால்தான்
இந்தியா வல்லரசாகும்
***

மூன்றாவது மனிதரிடம்
உன்னை பற்றி கேட்பவர்
உனக்கான உறவு இல்லை விலகிவிடு
***

திருத்தளம் சென்றால்
திருத்தலாம்
மனக்குழப்பங்களை
***

முட்டு கொடுக்கும்
உயிரினம்
மூங்கில்
***

வண்ணதாசன்
என்றொரு ஓவியன்
எழுத்துக்களில் வர்ணம் காண்பிப்பான்
***

தொடர்ந்து புத்தகத்தை
தின்றால் கரையான்
படித்தால் புழு
***

குறிப்பிட்ட வயதிற்கு மேல்
அடியை
அவமானமாய் கொள்க
***

என் புனைப் பெயர்களில்
எனக்கு பிடித்தது அவளின்
டேய்
***

அதட்டல்களில் சேராது !
அவளின்
டேய்
***

கனிக்கும் வரை பிழைக்க தான்
கனிக்கு இனிப்பு வழங்கினான்
பிரம்மன்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

# இவர்கள் படுத்தும்பாடு



காத்திருப்பு காலங்களில்

நாளையவற்றுக்கான
தயாரிப்பில்

பிறரின் அபிப்பிராயம்
பற்றிய யோசனையில்
செயல் பயணம்
தொடங்கும் கணத்தில்

நன்றாக பேசியவர்
வாய் அடைத்து
போகையில்
கிடைக்காது போய்விடுமோ

திட்டமிடல்
தவறு ஆகிவிட்டால்
அபிப்ராயம்
தவறாய் சொல்லப்பட்டால்

செயல்பாடு
நன்றாக இல்லையென்றால்

பேசாமல் இருக்க
தவறு நம்முடையதோ
என
நிகழ்வுக்கு முன்னே

அப்பப்பா
எண்ணற்ற குழப்பங்கள்

மனதும் புத்தியும்
படுத்தும் பாட்டால்

அதெல்லாம்
நடக்கப் போகிறதோ
இல்லையோ

அது வேறுகதை

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

## மொபைல் குயிலாகியது

## அத்தியாயம் 21

(புதினம்)



திலக் உணவை முடித்துக் கொண்டு ஆபீஸ் பையனிடம் வாங்கிவரச் சொன்ன பான் (வெற்றிலை) எடுத்து போட்டுக் கொண்டபோது, மொபைல் குயிலாகியது. எடுத்து அரசுவிடமுள்ள மொபைல் எண் என்பதை தெரிந்து கொண்டு "அரசு, சிங்கப்பூர் எப்படி இருக்கிறது?" என்று கேட்டான்.

"சிங்கப்பூர் வேலை முடிந்து ஒஸாகா வந்தாச்சு. உன்னுடய சிங்கப்பூர் கஸ்டமர் உனக்கு பணம் அனுப்பி விட்டான். புதிய ஆர்டரும் அனுப்பி இருக்கிறான். இ..மெயில் பார்த்தாயா?"

"இல்லை. பணம் வந்து விட்டால் ஒரு புது மெஷின் டோக்கியோவிலிருந்து இறக்குமதி செய்யலாம் என்றிருந்தேன்."

"உடனே இ..மெயில் பார்த்து வங்கியைத் தொடர்பு கொண்டு பணம் வந்தது தெரிந்ததும் எனக்கு போன் பண்ணு. நான் ஊர் திரும்புவதற்கு முன்னால் டோக்கியோ போய் உன் மெஷினுக்கு ஆர்டர் கொடுத்து விட்டு வருகிறேன்."

"ஏய் நீ ஏன் வீணாக அலைகிறாய்?" , "நான் வேறு யாருக்காகச் செய்யப் போகிறேன். உடனே போன் பண்ணு."

"சரிப்பா நீ போன காரியம் என்னாயிற்று."

"சிங்கப்பூர் மற்றும் ஒஸாகாவில் என் ஷிப்பிங் பார்ட்னர்களோடு ஒப்பந்தம் முடிந்து விட்டது. ஐப்பதுக்கு ஐம்பது லாப சதவிகிதம் பிரித்துக் கொள்ளலாம் என்று சொல்லி விட்டார்கள். இந்த அளவிற்கு எளிதாக

முடிந்து விடும் என்று நம்பவே இல்லை. எவ்வளவு பெரிய நெட் ஒர்க் வைத்திருக்கிறார்கள் தெரியுமா? அமெரிக்கா, ஆப்பிரிக்கா எல்லாம் கூட இவர்கள் மூலமாக நான் புதிய கப்பல் வர்த்தக ( ஷிப்பிங்) தொடர்பு கொள்ள முடியும் என்று நம்புகிறேன்."

"வெரிகுட். அப்புறம்?", "ம்.. ஒரு பெரிய விஷயம் சொல்ல மறந்து விட்டேன். இங்கே ஒஸாகா பிராஞ்ச் ஷிப்பிங் பார்ட்னர் அண்ணனுக்கு எப்படியாவது இந்தியாவிலே ஒரு கால் நடைத் தீவனம் கம்பெனி ஆரம்பிக்க ஆசை. இவர்கள் இன்னும் பழைய இந்தியாவை நினைத்துக் கொண்டு வேலையாட்களிடம் சம்பளம் குறைவு, அதனால் தயாரிப்பு (புரொடக்சன்) செலவு குறைவு என்று கணக்கிட்டுக் காட்டினான்.ரொம்பத் துல்லியமாக கணக்குப் போட்டு வைத்திருக்கிறான். பாராட்ட வேண்டும். அப்புறம் நாசிக்கில் ஏற்கெனவே ஒரு பழைய நிலம் விலைக்கு வந்த ஞாபகம் வர, அதையே வாங்கி வாங்கி விடச் சொல்லி இருக்கிறேன். அதைப் பற்றித் தெரியுமா? அங்கே தொழிற்சாலை ஆரம்பித்து விடலாம் என்று நினைத்து விஷயத்தை விவரமாகச் சொன்னேன்.அவன் சொன்னது தான் எனக்கே ஆகாயத்திற்கு தூக்கிக் கொண்டு போன ஆச்சரியமாகி விட்டது."

"சஸ்பென்ஸ் வைக்காதே சொல்லு.", "ஆரம்பிக்கிறதிலிருந்து மெஷினரி கொண்டு வந்து நிறுவி தயாரிப்பு ஆரம்பிக்கும் வரை அவர்கள் செலவு, இயந்திரங்கள் இறக்குமதி செய்து சுங்கவரி கட்டாமல் இருக்க நூறு சதவீதம் ஏற்றுமதி கம்பெனியாக சுங்க இலாக்காவிற்கு தெரிய படுத்தி சுங்க இலாகாவில் (கஸ்டம்ஸ்)பதிவு (ரெஜிஸ்டிரேஷன்) செய்து செலவுகளை குறைத்து செலவில் ஏற்றுமதி ஆரம்பித்து விட முடிவு செய்திருக்கிறார்கள்."

"சரி மேலே சொல்லுப்பா. உன் போன் பில் எகிறிக் கொண்டே போகிறது." என்றான் திலக்.

"பில்லைப் பற்றிக் கவலைப் பட்டால் காரியம் நடக்காது திலக். அந்த கம்பெனி நிர்வாகம் முழுவதும் என் தலைமையில் என் அம்மா பெயர் தாங்கி 'ராணி அனிமல் பீட்ஸ்' என்ற அளவில் உருவாகப் போகிறது."

"ஜப்பானில் இருந்து அவர்கள் நிர்வாகம் செய்வார்கள். அடிக்கடி இந்தியா வந்து போவார்கள். சரியாக இலாபத்தைக் கணக்கிட்டு (நெட் டு நெட் ஷேர் )நாற்பது அறுபது சவீதம் என்று பேசியுள்ளார்கள்.நாளை ஒப்பந்தம் கையெழுத்துப் போடுகிறேன். ஒரு உதவி செய். நான் இ..மெயில் தந்த நாசிக்காரன் போன் முகவரி எல்லாம் அனுப்புகிறேன். நாளைக்கே, (அவனைப்பார்த்து பன்னிரெண்டு ஏக்கர் நிலம் என்று சொன்னான்) அந்த இடத்தை பேசி முடித்து எப்படி பணம் தர வேண்டும், எப்படி கம்பெனி ஆரம்பிக்க வேண்டும் என்ற விஷயங்களை கொஞ்சம் தொடர்பு கொண்டு சொல்கிறாயா?"

"அரசு சூப்பர்டா. எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறாய். நானே உனக்கு அசிஸ்டெண்டாக சேர்ந்து விடலாம் போல இருக்கிறது."

"சும்மா கிண்டல் பண்ணாதே திலக். நீ தானே எனக்கு குருவாக இருந்தவன். அந்த இடத்திலேயே இரு. இன்னும் உன் வியாபாரத்தை பெருக்குவதில் உதவி செய்யப் பார்க்கிறேன். அப்புறம்... எங்கள் அப்பா ஆபீஸிலிருந்து யாராவது உன்னைத் தேடி வந்தார்களா?"

"இல்லையே ஏன் அப்படிக் கேட்கிறாய்?"

"இல்லை. கொஞ்சம் சந்தேகம். என் அப்பாவைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். நான் உன்னிடம் வந்தது, கம்பெனி போன செய்தி எல்லாம் அவருக்குப் போயிருக்கும்."

"இல்லை, உனக்கு ஏதாவது தகவல் கிடைத்ததா?"

"இல்லை திலக். ஆனால் ஏனோ என்னால் உனக்கு இடைஞ்சல் நேரப்போகிறது என்று உள் மனம் சொல்கிறது."

"அட, போப்பா. ஜப்பானிலே போயிருந்து கொண்டு என்னைப்பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாய். போன வேலையை ஒழுங்காக செய்து முடித்துவிட்டு திரும்பு."

"சரி.சரி.. உன்னைக் கொஞ்சம் கவனித்துக்கொள். ஏதாவது பிரச்சினை என்றால் சொல். உடனடியாக போன் பண்ண மறக்காதே. ம்... அப்புறம்மறந்து விட்டேன். உன் தங்கை பூனம் உன் கல்யாண

விஷயத்தைப் பற்றி பேசிக்கொண்டிருந்தாள். என்னாயிற்று?"

"முதலிலே பூனத்திற்கு ஒரு வழி பண்ண வேண்டும். இரண்டு மூன்று இடங்களிலே அவள் ஏற்கனவே திருமணமானவள் என்று தெரிந்தவுடன் தட்டி விட்டு விட்டார்கள். அவளுக்கு எங்கேயாவது அமைந்து விட்டால் அப்புறம் பார்க்கலாம்."

"யேய்.. நீ சொல்றதைப் பார்த்தால்... யாரையாவது லவ் பண்றியா?"

"அது நீ... வந்த பிறகு பேசிக்கொள்ளலாம்."

"படவா சொல்லு ஆமாவா இல்லாயா?"

"ஆமா."

"யாருடா?"

"எல்லாம் மும்பைத் திருமபு நேரிலே பேசிக்கலாம்." என தொடர்பைத்துண்டித்தான்.



தொடரும்...

### தோற்றம்



ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம், நல்லூர் என்னும் ஊரில் 1822 டிசம்பர் 18 இல் (சித்திரபானு ஆண்டு மார்கழி 5) புதன்கிழமை அவிட்ட நட்சத்திரத்தில் கந்தப்பிள்ளை - சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்கு இறுதி மகனாகப் பிறந்தார். நாவலரின் இயற்பெயர் ஆறுமுகம் என்பதாகும்.

### கல்வி

ஐந்தாவது வயதில் வித்தியாரம்பம் செய்யப்பெற்ற நாவலர், நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடம் நீதிநூல்களையும் தமிழையும் கற்றார். ஒன்பதாவது வயதில் தந்தையை இழந்தார். மூத்த தமையனாரால் முதலில் சரவணமுத்துப் புலவரிடமும் பின்னர் அவரது குருவாகிய சேனாதிராச முதலியாரிடமும் உயர்கல்வி கற்க அனுப்பப்பட்டார். பன்னிரண்டாவது வயதிலேயே தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றுப் புலமை பெற்றார்.

### பணிகள்

### சமயப் பணி

சைவத் தமிழ்ப் பண்பாட்டுக்கு இசைவான கல்வி, சைவசமய வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி ஆகிய நோக்கங்களுக்காகப் பணிபுரியத் தொடங்கினார் நாவலர். சைவ சமயம் வளரும் பொருட்டு பிரசங்கம் செய்வதெனத் தீர்மானித்தார்.

## அச்சுப் பணி

சைவப்பிள்ளைகளுக்குப் பாடநூல்கள் அச்சிடுவதற்கு அச்சியந்திரம் வாங்குவதற்காக நல்லூர் சதாசிவம்பிள்ளையுடன் 1849 ஆடி மாதம் சென்னை சென்றார். அங்கு திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவப்பிரசங்கம் செய்து தமது புலமையை வெளிப்படுத்தி 'நாவலர்' பட்டத்தைப் பெற்றார்.

## தமிழகப் பணி

இவரது பணி இலங்கையில் மட்டுமன்றித் தமிழ் நாட்டிலும் பரவியிருந்தது. சென்னையில் திருவாசகம், திருக்கோவையார் நூல்களை 1859 வைகாசி மாதம் வெளியிட்டார்.

## போலியருட்பா மறுப்பு

இராமலிங்க அடிகள் (வள்ளலார்) பாடிய பாடல்களைத் திருமுறைகளுடன் ஒப்பிட்டு, சில ஆலய உற்சவங்களிலே திருமுறைகளுக்குப் பதிலாகத் அவரது பாடல்களைப் பாடுவதைக் கண்ட நாவலர், போலியருட்பா மறுப்பு எனும் நூலை எழுதி வெளியிட்டார்.

## சைவப் பாடசாலை நிறுவல்

1870-இல் நாவலர் கோப்பாயில் ஒரு வித்தியாசாலையை ஆரம்பித்து தமது செலவில் நடத்தினார். 1871-இல் வண்ணார்பண்ணையில் ஜோன் கில்னர் என்பவர் நடத்திய வெசுலியன் ஆங்கிலப் பாடசாலையில் சைவ மாணாக்கர் விபூதி அணிந்து சென்றமைக்காகப் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அப்பிள்ளைகளின் நன்மை கருதிய நாவலர், சைவ ஆங்கிலப் பாடசாலை ஒன்றை வண்ணர்பண்ணையில் 1872 தை மாதத்தில் நிறுவி நடத்தினார். நிதி வசதி இன்மையால் இப்பாடசாலை நான்கு ஆண்டுகளே நடைபெற்றது.

திரு அ.வில்சன், இதழாசிரியர்


### நாவலர் பதிப்பித்த நூல்கள்

- அகத்தியர் அருளிய தேவாரத் திரட்டு
- அன்னம்பட்டியம்
- இலக்கணக் கொத்து
- இலக்கணச் சுருக்கம்
- இலக்கண விளக்கச் சூறாவளி
- இலக்கண வினா விடை
- இலங்கை பூமி சாஸ்த்திரம்
- ஏரெழுபது
- கதிர்காமத் திருமுருகன் கீர்த்தனங்கள்
- கந்தபுராண வசனம்
- கந்தபுராணம் பகுதி 1-2
- கொலை மறுத்தல்
- கோயிற் புராணம் (புதிய உரை)
- சிதம்பரமான்மியம்
- சிவஞானபோதமும் வார்த்திகமென்னும் பொழிப்புரையும்
- சிவஞானபோத சிற்றுரை
- சிவராத்திரி புராணம்
- சிவசேத்திராலய மஹாத்ஸவ உண்மைவிளக்கம்
- சிவாலய தரிசனவிதி
- சுப்பிரமணிய போதகம்
- சூடாமணி நிகண்டு (திருக்கோவையார் மூலம், உரை)
- சேது புராணம்
- சைவ சமயநெறி
- சைவ தூஷண பரிகாரம்
- சைவ வினா விடை
- சௌந்தர்யலகரி உரை
- ஞானகும்மி
- தருக்கசங்கிரகம்
- தருக்க சங்கிரக தீபிகை
- தனிப்பா மாலை
- தாயுமானசுவாமிகள் திருப்பாடல் திரட்டு
- திருக்குறள் (திருக்கோவையார் மூலம், பரிமேலழகர் உர
- திருக்கை வழக்கம்
- திருக்கோவையார் மூலம்
- திருக்கோவையார் நச் உரை
- திருச்செந்தூர் நிரோட்டயமக வந்தாதி
- திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம்
- திருத்தொண்டர் புராணம்
- திருமுருகாற்றுப்படை
- திருவாசகம் மூலம்
- திருவிளையாடற் புராணம் மூலம்
- திருவிளையாடற் புராணம் வசனம்
- தெய்வயானையம்மை திருமணப்படலம்
- தொல்காப்பியம் சூத்திர விருத்தி
- தொல்காப்பியம் சொல். சேனா. உரை
- நன்னூல் காண்டிகை உரை
- நன்னூல் விருத்தி உரை
- நீதி நூல் திரட்டு மூலமும் உரையும்
- நைடத உரை

திரு அ.வில்சன், இதழாசிரியர்

### நாவலர் பதிப்பித்த நூல்கள்

- பதினோராம் திருமுறை
- பாலபாடம் - 4 தொகுதிகள்
- பிரபந்தத் திரட்டு
- பிரயோக விவேகம்
- புட்ப விதி
- பெரிய புராண வசனம்
- போலியருட்பா மறுப்பு
- மார்க்கண்டேயர்
- யாழ்ப்பாணச் சமயநிலை
- வக்கிரதண்டம்
- வாக்குண்டாம்
- விநாயக கவசம்




### இறுதி நாட்கள்

1879-ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 18-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை நாவலரது உடல் நலம் குன்றியது. அடுத்த மூன்று தினங்களும் குளிக்க முடியாதிருந்ததால் நாவலரது நித்திய சிவபூசை வேதாரணியத்துச் சைவாசாரியர் ஒருவரால் செய்யப்பட்டது. 21-ஆம் நாள் வெள்ளிக்கிழமை (05-12-1879) இரவு தேவாரம் முதலிய அருட்பாக்களை ஓதும்படிக் கட்டளையிட்டு அவைகள் ஓதப்படும்போது சிதம்பரம், காசி, மதுரை, திருச்செந்தூர், முதலிய புண்ணியத்தலங்களின் விபூதி அணிந்து, உருத்திராட்சம் பூண்டு, கங்காதீர்த்தம் உட்கொண்டு, கைகளைச் சிரசின்மேற் குவித்து, இரவு ஒன்பது மணியளவில் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

நன்றி
https://ta.wikipedia.org/

திரு அ.வில்சன், இதழாசிரியர்

# நாளை நமதே

## எந்த சிக்கலுமே

## உன்னை சிதைக்க

## வந்தது அல்ல

## செதுக்க வந்ததே

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com